# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

**S.C. No. 30/2024**

**PW6**

| | | |
|---|---|---|
| Name | : | செல்வராசு |
| Father's Name | : | கிருஷ்ணமூர்த்தி |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.07.2025.

Accused present.

**முதல் விசாரணை**

நான் துரிஞ்சிகுப்பம் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன் . இந்த வழக்கில் கொலை செய்யப்பட்ட மணிகண்டனை எங்கள் ஊரை சேர்ந்தவர் . ஆஜர் எதிரியை தெரியும் . அவர் இறந்த மணிகண்டனின் நண்பர் . நான் சம்பவ காலத்தில் துரிஞ்சிகுப்பம் ஊராட்சி மன்ற உப தலைவராக இருந்தேன் . எங்கள் ஊரை சேர்ந்த ராமு மகன் சிவக்குமார் என்பவரை தெரியும் . அவருக்கு ஒரு மகள் , ஒரு மகன் இருந்தார்கள் . அந்த மகன்தான் மணிகண்டன் . மணிகண்டன் சென்னையில் மேஸ்திரி வேலை செய்துவந்தார் . மணிகண்டன், எதிரிக்கு ரூ. 5000 கடனாக கொடுத்தார். அதில் எதிரி ரூ . 3000 திருப்பி கொடுத்துவிட்டார். பாக்கி ரூ. 2000 இருந்தது. அதை மணிகண்டன் 04.12.2022 அன்று எதிரியிடம் போன் மூலம் அதை கேட்டுள்ளார் . அதற்கு எதிரி நான் நேராக வந்து தருகிறேன் என்று சொல்லிவிட்டு, ஊருக்கு வந்துவிட்டார் . பெரியேறியில் நடந்த வளைகாப்பு நிகழ்ச்சிக்கு எதிரியும் வந்தார். அந்த அலுவல் முடிந்தபிறகு எதிரியும் மணிகண்டனும் எதிரியின் ஊரான பூங்கொல்லைமேடுக்கு சென்று விட்டார்கள். மறுநாள் 05.12.2022

அன்று போளூர் அரசு மருத்துவமனைக்கு ஒரு ஆயாவை பார்க்க நானும் என் மாமா பாஸ்கரனும் சென்றோம். போகும் போது அல்லிநகர் பூங்கா அருகே எதிரியை போளூர் காவல் ஆய்வாளர் பிடித்து விசாரணை செய்துகொண்டிருந்தார் . நானும் பாஸ்கரனும் அருகே சென்றபோது நான் எனக்கு எதிரியை தெரியும் என்று சொன்னேன். எதிரி அப்போது ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் . அதை ஒரு போலிசார் லேப்டாப்பில் பதிவு செய்துகொண்டார் . அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.3.** அதில் நானும், பாஸ்கரனும் கையொப்பம் செய்தோம். தன்னை பூங்கொல்லைமேடு ராஜமாணிக்கம் கரும்பு தோட்டத்திற்கு அழைத்துச் சென்றால் சம்பவத்திற்கு பயன்படுத்திய 3 அடி முள்வேலி கொம்பை ஆஜர்படுத்துவதாக சொன்னார். பின்னர் அந்த 3 அடி முள்வேலி கொம்பை அதை போலிசார் கைப்பற்றிக்கொண்டார்கள் . அந்த மகசரில் நானும் பாஸ்கரனும் கையொப்பம் செய்தோம் . அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.4.** தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கொம்புதான் அன்று போலிசார் கைப்பற்றியது (ஏற்கனவே அது அ.சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது ). இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

மணிகண்டன் , எதிரிக்கு ரூ. 5000 கடன் கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. மணிகண்டன் மீதி ரூ . 2000 போன் மூலம் கொடுக்க வேண்டும் என்று கேட்டது நேரடியாக தெரியும். மணிகண்டன் மாரியம்மன் கோவில் பெரியேறியில் இருந்து எதிரிக்கு 04.12.2022 அன்று பகல் 11 மணிக்கு போன் செய்து கேட்டார் . அதற்கு எதிரி பெரியேறிக்கு வந்து தருவதாக சொன்னார் . இந்த விவரத்தை நான் போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் அதை பற்றி கேட்காததால் நான் சொல்லவில்லை. சீமந்த நிகழ்ச்சிக்கு மணிகண்டனும் எதிரியும் சென்றார்கள் என்பதை நான் போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் . 04.12.2022 அன்று காலை 10 மணிக்கு சீமந்தம் நடந்தது . சீமந்த நிகழ்க்சியில் இருந்து மணிகண்டனும் எதிரியும் பெரியேறியில் இருந்து சென்றதை நான் நேரடியாக பார்த்தேன் . 04.12.2022 அன்று காலை 10 மணிக்கு நானும் சீமந்தத்திற்கு சென்றிருந்தேன் . எதிரி பெரியேறிக்கு வந்திருந்தார். எதிரி பெரியேறிக்கு வந்த பிறகு சீமந்த நிகழ்ச்சிக்கு சென்றார்கள். போலிசார் எதிரியை விசாரணை செய்தபோதுதான் மணிகண்டன் இறந்த விவரம் தெரிந்தது. துரிஞ்சிக்குப்பத்தில் இருந்து அல்லிநகரில் நான் எதற்கு சென்றேன் என்றால் மருத்துவமனையில் இருந்த ஆயா குள்ளம்மாளை பார்க்க

சென்றிருந்தேன். நானும் பாஸ்கரும் அவரின் காரில் சென்றுகொண்டிருந்தோம் . எதிரி மணிகண்டனை கொலை செய்தேன் என்று வாக்குமூலம் கொடுத்ததை நான் போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் . எதிரி மதியம் 2 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் . நானும் பாஸ்கரனும் ஆயா குள்ளம்மாளை பார்க்க சென்றதான போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளோம் . காவல் ஆய்வாளர் எதிரியை எனக்கு ஏற்கனவே தெரியுமா என்று கேட்டார் நான் தெரியும் என்று சொன்னேன். நான் போலிசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.